## மாணவர் விடுதியில் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள்

1. கல்லூரி விடுதி முதலாமாண்டு மாணவர்கள் இரவு 6.30 மணிக்கு மேல் வெளியே (Daily Outing & Home) செல்ல அல்லது உள்ளே வர அனுமதி இல்லை. இரண்டாமாண்டு, மூன்றாமாண்டு மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் இரவு 8.00 மணிக்கு மேல் வெளியே (Daily Outing & Home) செல்வது அல்லது உள்ளே வருவது கூடாது.
2. விடுதியிலிருந்து வெளியே செல்வதற்கு முன்பும், விடுதிக்கு வந்த பின்பும் பதிவேட்டில் (Outing & Home Register) கண்டிப்பாக சென்ற மற்றும் வந்த நேரத்தை பெயர் (தெளிவாக (AM & PM)) மற்றும் கையொப்பத்துடன் எழுத வேண்டும்.
3. முதலாமாண்டு மாணவர்கள் இரவு 7 மணிக்கும், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்கள் இரவு 9.30 மணிக்கும் வருகைப் பதிவேட்டில் (Attendance) மாணவர்கள் உள்ளனரா என்று அந்தந்த மாணவர்களின் Representative அல்லது விடுதி மேற்பார்வையாளர் குறிப்பு எடுப்பார்.
4. Attendance எடுக்கும் நேரத்தில் முன் அனுமதியின்றி காலதாமதமாக வரும் மாணவர்கள் விடுதி துணைக்காப்பாளரிடம் சென்று காலதாமதத்திற்கான காரணத்தை தெரிவிக்க வேண்டும்.
5. மாணவர்கள் தினமும் Attendance எடுத்த பிறகும், ஊருக்கு மற்றும் வெளியில் செல்லும் போதும் Biometric Finger Print கண்டிப்பாக பதிவிட வேண்டும்.
6. உடல்நலக்குறைவு அல்லது வேறு காரணத்தினால் வகுப்பிற்கு செல்லாத மாணவர்கள் Faculty Advisor-ரிடம் அனுமதி கடிதம் பெற்று விடுதியில் அதற்கான பதிவேட்டில் (Sick Note) பதிவிட்ட பிறகே அறையில் தங்க வேண்டும்.
7. கல்லூரி நேரத்தில் கண்டிப்பாக மாணவர்கள் விடுதியில் தங்க கூடாது. அவ்வாறு தங்கும் பட்சத்தில் தகுந்த காரணத்தை முன்கூட்டியே விடுதி துணைக்காப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும்.
8. மாணவர்கள் விடுதி அறையை மாற்ற வேண்டுமென்றால் விடுதி துணைக்காப்பாளர் அனுமதியுடன் செயல்பட வேண்டும். தங்கள் அறைகளைத் தவிர மற்ற அறைகளுக்கு செல்வதோ அல்லது தங்குவதோ கூடாது.
9. மாணவர்கள் தங்களது அறையை எப்போதும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எப்போது வேண்டுமானாலும் விடுதி அதிகாரிகளால் மேற்பார்வை செய்யப்படும். தேவையற்ற பொருட்கள் **(Iron Box, Kettle, Heater, etc..)** அனுமதியின்றி வைத்திருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அபராதம் ரூ.500 விதிக்கப்படும். தொடர்ச்சியாக விதிமீறல்களில் ஈடுபடும் மாணவர்கள் விடுதியிலிருந்து நீக்கப்படுவர்.
10. விடுதி மாணவர்கள் தங்கும் அறை, குளிப்பறை, உணவு உண்ணும் இடம், தொலைக்காட்சி பார்க்கும் அறை, மற்றும் விடுதி பொது இடத்தில் யாருக்கும் இடையூறு வராமல் அமைதி காக்க வேண்டும். இடையூறு ஏற்படுத்தும் மாணவர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.

03-9-24

PRINCIPAL AND WARDEN,
TPGIT HOSTELS,
VELLORE - 632 002.

11. விடுதியில் உள்ள எந்த பொருட்களையோ சேதப்படுத்தினால் Breakage Fee மூன்று மடங்கு வசூலிக்கப்படும்.
12. உடல் உபாதை ஏதாவது ஏற்பட்டால் அந்த மாணவருக்கு உரிய முதல் மருத்துவ உதவி அளிக்கப்படும். தொடர் சிகிச்சை அளிக்க இயலாது. Chronic Major Disease ஏதேனும் இருப்பின் விடுதி சேர்க்கையின் போது தெரிவிக்க வேண்டும். Chronic Major Disease (தீவிர நோய்) உட்பட்ட மாணவருக்கு பெற்றோர்கள் அவர் பொறுப்பிலேயே வைத்து சிகிச்சை அளித்து குணப்படுத்தி அனுப்ப வேண்டும்.
13. மாணவர்கள் தொலைக்காட்சி பார்க்கும் நேரம் இரவு 7 மணியிலிருந்து இரவு 8.30 மணி வரை.
14. மாணவர்கள் காலை 6 மணியிலிருந்து காலை 7 மணி வரை மற்றும் இரவு 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை கண்டிப்பாக படிக்கும் நேரமாக கடைப்பிடிக்க வேண்டும். படிக்கும் நேரத்தில் கண்டிப்பாக அமைதி காக்க வேண்டும்.
15. மாணவர்கள் விடுதி மற்றும் உணவு விடுதி வேலையாட்களுடன் எவ்வித தேவையற்ற பேச்சுவார்த்தை இருக்கக் கூடாது. ஏதேனும் புகார் இருப்பின் துணை விடுதி காப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும்.
16. மாணவர்கள் ஊரிலிருந்தோ அல்லது வெளியில் சென்றிருந்தாலோ விடுதி மூடப்படும் நேரத்திற்கு முன்னதாகவே வர வேண்டும். அடிக்கடி காலதாமதமாக வரும் மாணவர்கள் விடுதியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.
17. மாணவர்கள் வருகைப்பதிவேட்டில் தவறாக பதித்தல், ஒழுக்கமின்மை, விடுதி விடுப்பு நாட்கள் அதிகம், ஒரு மாணவனுக்கு இன்னொரு மாணவன் கையொப்பம் இடுதல் அல்லது கையொப்பம் போடாமல் விடுதியில் தங்குதல் போன்ற ஒழுக்கமற்ற செயல்களில் ஈடுபட்டால் அந்த மாணவர் விடுதியிலிருந்து வெளியேற்றப்படுவார்கள்.
18. மாணவர்கள் வார இறுதி நாட்களில் மட்டுமே அவர்கள் சொந்த ஊருக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படுவர். இடையில் செல்லும் மாணவர்கள் Faculty Advisor–ரிடமும் விடுதி துணைக்காப்பாளரிடமும் அனுமதி கடிதம் பெற்று விடுதியில் சமா்ப்பித்து பதிவேட்டில் குறித்த பிறகே ஊருக்கு செல்ல அனுமதிக்கப்படுவர்.
19. Sport and Events வெளி கல்லூரிகளில் கல்லூரி சார்பாக கலந்து கொள்ளும் மாணவர்கள் முன்னதாகவே விடுதி துணைக்காப்பாளரிடம் அனுமதி கையொப்பம் பெற்றிருந்தால் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
20. சக மாணவர்களிடம் அடிதடி மற்றும் பகடிவதை (Ragging) செய்யும் மாணவர்கள் விடுதியிலிருந்து முன்னறிவிப்பின்றி வெளியேற்றப்படுவார்கள் மற்றும் அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
21. இக்கல்லூரி வளாகம் எவ்வித போதைப் பொருளும் இல்லாத வளாகமாக இருக்க வேண்டும். மாணவர்கள், மது அல்லது எவ்வித போதைப் பொருட்கள் கல்லூரி வளாகத்தில் உபயோகிப்பது தெரியவந்தால் உடனடியாக அம்மாணவர்கள் விடுதியிலிருந்து நீக்கப்படுவர். மேலும், விதிகளை மீறும் மாணவர்கள் மீது கல்லூரி நிர்வாகத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

PRINCIPAL AND WARDEN,
TPGIT HOSTELS,
VELLORE - 632 002.

22. வெளியில் தங்கும் மாணவர்களை (Dayscholar) விடுதியின் உள்ளே அழைத்து வர அனுமதி இல்லை.
23. விடுதியில் பிறந்த நாள் கொண்டாட்டம் முற்றிலுமாக தடைசெய்யப்பட்டுள்ளது.
24. மாணவர்கள் முந்தைய மாத உணவு விடுதி கட்டணத்தை அறிவிப்புப் பலகையில் அறிவித்த தேதிக்குள் செலுத்த வேண்டும். (உதாரணமாக மாத உணவுக் கட்டணத்தை 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டும்). 16-ம் நாள் முதல் 20-ம் நாள் வரை ஒரு நாளைக்கு ரூபாய் 10 வீதம் வசூலிக்கப்படும். 20-ம் நாளுக்கு மேலும் உணவு விடுதிக் கட்டணத்தை செலுத்தத் தவறினால் ரூ.350/- மறுசேர்க்கைக் கட்டணம் செலுத்த வேண்டும். மறுசேர்க்கை கட்டணத் தேதி கடந்தும் விடுதி உணவுக் கட்டணத்தை செலுத்தாத மாணவர்கள் விடுதியிலிருந்து **அம்மாதமே** வெளியேற்றப்படுவார்கள்.
25. I, II, III ,IV & PG மாணவர்களுக்கு விடுப்பில் உள்ள போது N-2-ன்படி (தொடர்ந்து 7 நாட்கள் மற்றும் அதற்கு மேல் விடுப்பு) Mess Reduction அளிக்கப்படும். இருப்பினும் Semester பல்கலைக்கழக தேர்வு அனைத்தும் முடிந்த பிறகு அளிக்கப்படும் விடுமுறை நாட்களுக்கு ஊருக்கு சென்று வரும்போது முழு Mess Reduction அளிக்கப்படும். Study Leave-ற்கு N-2-ன்படி (தொடர்ந்து 7 நாட்கள் மற்றும் அதற்கு மேல் விடுப்பு) Mess Reduction அளிக்கப்படும். மாணவர்களின் எண்ணிக்கை மிகமிக குறைவாக இருக்கும் பட்சத்தில் விடுதி உணவகம் மூடப்படும் போது முழு Mess Reduction அளிக்கப்படும்.
26. மாணவர்கள் விடுதி உணவை அறைக்கு கொண்டு செல்லக் கூடாது.
27. மாணவர்கள், வகுப்பிற்கு செல்லும் முன் அவர்களது உடமைகளை பத்திரமாக வைத்து விட்டுச் செல்லவும். தங்களது உடமை காணாமல் போனால் கல்லூரி விடுதி நிர்வாகம் பொறுப்பல்ல.
28. விடுதியை காலி செய்யும் மாணவர்கள் எவ்வித உணவுக் கட்டணமும் நிலுவையில் இல்லாமல் இருக்க வேண்டும். நிலுவையில் இல்லாத மாணவர்களுக்கு மட்டுமே No Dues வழங்கப்படும்.
29. விடுதியின் விதிமுறைகளை பின்பற்றாத மாணவர்கள் உடனடியாக விடுதியிலிருந்து வெளியேற்றப்படுவர்.
30. மாணவர்கள் அறையை விட்டு வெளியில் வரும் போதும், Hostel Office, Mess Hall, ஊருக்கு மற்றும் Outing செல்லும் போது Dress Code பின்பற்றப்பட வேண்டும் தவறினால் விடுதியிலிருந்து வெளியேற்றப்படுவர்.

PRINCIPAL AND WARDEN,
TPGIT HOSTELS,
VELLORE - 632 002.